www.padippakam.com



# அகதியான போது ..................

--------------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

## பாகம் 4

அடுத்ததாக மலை நாட்டை சேர்ந்த பணக்கார ஊரின் செல்லப்பிள்ளை அமைச்சர் இடம் பெயர்ந்த மக்களுக்காக செய்த சேவை பற்றி கூற ஆசைப்படுகிறேன்

வழமையான பந்தாவுடன் அகதி முகாம்களுக்கு விஜயம் செய்த அவர்

" உங்களது மனைவிமார்களை ,சகோதரிகளை ,மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக

அனுப்ப உதவி செய்கிறேன் " சொனார் பரோபகாரியாக ...

யாழ்ப்பாண முஸ்லீம்களிடம் வெளிநாட்டுக்கு பணிபெண்ணாக அனுப்பும் நடைமுறை எப்போதும் இருந்து வந்ததில்லை .விரல் விட்டு எண்ணினால் ஒன்று அல்லது இரண்டு சம்பவங்கள் அவ்வாறு இடம் பெற்றிருந்த போதும் அவ்வாறான குடும்பங்களை ஊரில் இருந்து ஒதுக்கி வாழும் நிலை காணப்பட்டது .

அதனால் அந்த பரோபகாரியான அமைச்சரிடம் சென்ற யாழ் முஸ்லிம் குழு ,"உங்களது உதவிக்கு மிக்க நன்றி .எங்களது ஊரில் பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் பண்பாடு இல்லை அதனால் அந்த உதவியை எங்கள் ஆண்களுக்கு பெற்றுத்தருவீகலானால் மிகவும் நன்றாக இருக்கும்"என்ற போது அந்த மகான் ,சமூகத்தை பாராளுமன்றத்தில் மட்டுமல்ல ,பொறுப்புள்ள அமைச்சு என்ற பேரிலும் சுமந்த அவர் சொன்ன பதில் ,

"இந்த அகதிகுள்ளு சூ (சப்பாத்து )தந்தால் போலிஷ் பண்ணி விடவும் கேட்பாங்கள் " என்பதுதான் .அவர் வாயால் செய்த உதவி அதுதான் .

உம்மாஹ் என்பதெல்லாம் வரலாற்றில் உள்ள வாசிக்கப்படும் ஏடாகத்தான் நம் சமூகத்தில் உள்ளது . ஒருவனுக்கு உதவி செய்ய முன் அவனது ஊர் கேட்டு ,ஊர் பார்த்து உதவி செய்யும் வழக்கம் மாறும் வரை , சமூக ஒற்றுமை என்பதெல்லாம் வெள்ளிக்கிழமை குத்பாகளின் மிம்பர்களின் மட்டும் ஒலிக்கப்படும் வேண்டுகோளாகத்தான் இருக்கும் .பிரதேச வாதம் ,தேசிய வாதம் என்பதெல்லாம் பிரித்தானியர் விதைத்த விதைகளில் முளைத்து
இன்று நானும் நீங்களும் அழகு பார்க்கும் நச்சு மரமாக வானைத்தொடும் அளவில் ஒவ்வொருவர் மனதிலும் வளர்ந்து விட்டுள்ளது .

ஒவ்வொரு அமைச்சரும் அகதிகளைப்பார்க்க வந்த போது அரசுக்கு பந்தம் பிடிக்கும் லேக்ஹவுஸ் புகைப்பிடிப்பாளர்களையும் ,பத்திரிகையாளர்களையும் அழைத்து வந்து

படிப்பகம்

www.padippakam.com

போட்டோ எடுத்து ,பக்கம் பக்கமாக மனிதாபிமான கட்டுரை எழுத வைத்து புகழ் தேடி அடுத்த தேர்தலுக்காக தன்னை தயார் படுத்தி கொள்ள மறக்க வில்லை .

5 மாதம் இக்கிரி கொல்லாவைகியில் தங்கியிருந்தோம். பல குடும்பங்கள் ஒரே வீட்டில் தங்கி இருந்ததால் சமையல் தொடங்கி குளியல் முதல் கழியல் வரை மணித்தியாலக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது .இயற்கையோடு சேர்ந்தால் போல வாழ்கையும் சென்றது .இக்கிரி கொள்ளவை கிணறுகள் 15-20 மீட்டர்கள் ஆழமானதாக இருந்ததால் குளிக்கும் போது ஒரு வாளியில் தண்ணீர் எடுத்து குளித்து மறு வாளியை அள்ளும் போது உடலில் உள்ள ஈரம் காய்ந்து விடும் நிலை காணப்பட்டது. கல்வி என்பது கஷ்டத்தால் கவனிக்கப்படாது இருந்தது. ஆனாலும் மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்திலும் இரவு நேரத்தில் கண்டிப்பாக ஓரிரு மணித்தியாலங்கள் செலவிட வேண்டும் என்பது எனது தகப்பனின் கண்டிப்பான உத்தரவாக இருந்தது .

ஏனைய நேரங்களில் பகல் முழுவதும் அந்த வீட்டில் தங்கியிருந்த சிறுவர்களுடன் நானும் கேட்டம்பொல்லை காவிக்கொண்டு வேட்டை என்ற பேரில் குக்கிராம காடுகளில் அலைந்து திரிந்தது பொழுது போக்காக இருந்தது . நகர வாழ்கையில் இருந்து குக்கிராம வாழ்கை கஷ்டத்துக்கும் மத்தியில் ஏதோ ஒரு வகையில் பிடித்து இருந்தது .

விளைச்சல் காலத்தில் நெல் அவிக்கும் போதும் ,விளைச்சலுக்காக வாய்க்கால் திறக்கும் போது தண்ணீரில் குளித்ததும் ,அங்குள்ள ஒரே ஒரு தாமரைக்குளத்தில் குளித்ததும் ,முயலுக்கு தடம் விரித்து வீட்டுக்கோழி அகப்பட்டதும் ,முயல் வேட்டைக்கு போவதும் அந்த இக்கிரி கொல்லாவ விட்டுச்சென்ற காலத்தால் அழிக்க முடியாத இனிய ஞாபகங்கள் ....

எனது தந்தை ஓர் ஆசிரியனாக இருந்தமையால் எமது கல்வி நோக்கம் கருதி அனுராதபுரம் நகரம் நோக்கி நாம் இடம் பெயர்ந்தோம் .அங்கு விவேகானத்தா வித்தியாலயத்தில் கல்வி கற்ற போது அங்கே அதிபராக இருந்தவர் ஜுனைதீன் என்பவர் . மிகவும் நல்ல மனம் கொண்ட அவர் ,அகதி மாணவர்களின் மேம்பாட்டுக்காக செய்த உதவிகளுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக .அந்த அனுராதபுர வாழ்கையும் சிறுவனாக இருந் என் நினைவுகளை நிறைத்தது .பண்டைய கால நினைவுச்சின்னங்கள் ,பழைய நகரம் ,அழகிய ரௌண்ட போட்டுகள் அமைப்பு அனைத்தும் மனதில் நீங்காத இடம் பிடித்திருந்தன .

அனுராதபுரத்தில் இருக்கும் போது தான் இடி விழும் செய்தி வந்தது .ஆம் ,அது 1990 ஆம் ஆண்டு .அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி .வரலாற்றின் அத்தியாயத்தில் இரத்தக்கறை படிந்த தினம் அது . தமது சுத்தமான போராட்டத்தை புலிகள் சாக்கடையாக்கி ,கேவலப்படுத்திய இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்ட தினம் அது . புலிகளின் போராட்டத்தின் நன்றி கேட்ட தனத்தை ,மிருகத்தனத்தை , அகிலத்துக்கு பறை சாற்றிய கரி படிந்த நாள் அது .

யாழ்ப்பாணத்தில் ,முல்லைத்தீவில் இருந்து இரு மணித்தியாலத்திலும் ,மன்னாரில் இருந்து இருபத்தி நான்கு மணி நேரத்திலும் துப்பாக்கி முனையில் உடுத்த ஆடைகளுடன் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட தினம் அது . பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமது பாரம்பரிய பூமியில் இருந்து அனைத்து அசையும் ,அசையா சொத்துக்களும் பறித்து எடுக்கப்பட்ட நிலையில் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட அந்த தினம் வரலாற்றில் கரை படிந்த இனச்சுத்திகரிப்பு நிகழ்த்த நாள் .

அந்த இனச்சுத்திகரிப்பு அப்போது இருந்த எந்த முஸ்லீம் அமைச்சராலும் எந்த முஸ்லீம் ஊடகங்களாலும் சர்வதேச ரீதியாக

எடுத்துச்செல்லப்படவில்லை .புலிகளுக்கு சார்பாக இருந்த செய்தி ஊடகங்களினால் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தன .அரச சார்பு ஊடகங்களால் ஒருவரி செய்தியா வாசிக்கப்பட்டு ,எழுதப்பட்டு கண் கசக்கப்பட்டிருந்தன .

படிப்பகம்

www.padippakam.com

அகதிகளாக வந்தவர்களுக்கு தங்கி இருக்க எந்த இடமும் கிடைக்காததால் 1982 ஆம் ஆண்டு தமிழ்சிங்கள இனக்கலவரத்தின் போது கை விடப்பட்டிருந்த அனுராதபுரத்தில் உள்ள கதிரேசன் கோவிலிலும் பல முஸ்லீம் குடும்பங்கள் தங்கியிருந்தன . அனுராதபுர மக்களே அந்த கோவில் அபயகரமானது என்று கைவிட்டிருந்த நிலையில் அகதிகளாக வந்த பல குடும்பங்கள் அந்த கோவிலில் அன்றைய இரவை கழித்தன.கலவரத்தின் போது பலர் கோவிலினுள் வெட்டப்பட்டிருந்த போது ஏற்பட்ட இரத்த அடையாளங்கள் அப்போதும் மாறாமல் அந்த கோவிலில் இருந்ததை அங்கு தங்கியிருந்த மக்களுக்கு உதவி செய்ய எனது தந்தையோடு சென்ற போது காணக்கிடைத்தது

இங்கு கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தெற்கில் வாழ்ந்த முஸ்லீம் சகோதரர்களுக்கு ஈராக்கில் என்ன நடக்கிறது ,பாலஸ்தீனத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்ததே தவிர நம் சொந்த மண்ணில் உள்ள உறவுகளுக்கு நடந்த அநீதி பற்றி தெரிந்திருக்க வில்லை .இன்னமும் பலருக்கு தெரியாது .

அனுராத புரத்தில் இருந்து தர்கா நகருக்கு சென்று அங்கு வாழ ஏற்பாடாகி இருந்தது.அந்த பிரயாணத்துக்கு ஒரு நாளுக்கு முன்னர் இசுறு முனி விகாரையை பார்கச்சென்ற நான் அங்கிருந்த குன்றில் இருந்து கால் தடுமாறி விழுந்ததில் ஒரு காலை உடைத்துக்கொண்டேன்.மரத்தால் விழுந்தவனை மாடேறி மிறித்த கதை என்பது இதுதானோ....மறு நாள் இயலாத காலுடன் தகப்பனின் உதவியுடன் அனுராதபுர ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு வந்தோம்.சில நாட்களின் பின்னர் அடுத்த பயணம் ஆரம்பமானது

1992 இல் தர்கா நகருக்கு இடம் பெயர்ந்தோம் .அப்போது ஆசிரியனாக இருந்த எனது தந்தையின் மாதாந்த சம்பளம் இடம் பெயர்ந்த அகதி ஆசிரியன் என்பதால் வெறும் ஆயிரம் ரூபா. ஆசிரிய பைல்கள் உரிய திணைக்களத்துக்கு வந்து சேரவில்லையாம் அதனால்தான் அந்த சம்பளம். நன்கு பிள்ளைகளை இந்த வருமானத்துக்குள் பராமரிக்க வேண்டிய நிலை .அரச ஊழியன் என்பதால் அகதிகளுக்கு அரசாங்கம் கொடுத்து வந்த 800 ரூபாய் கொண்ட மாதாந்த நிவாரணம் வேறு இல்லை .அரச ஊழியர் என்றால் அகதிகளுக்கான நிவாரணம் இல்லை என்பது அப்போது இருந்த அரசாங்கத்தின் கண்மூடித்தனமான சட்டம் .இந்த நிலையில் எந்த அளவு கஷ்டமான சூழ்நிலையில் எமது குடும்பம் இருந்திருக்கும் என்பதை கற்பனை பண்ண முடிகிறதா ?அது மாத்திரம் இன்றி தர்கா நகரில் உள்ள சாஹிரா கல்லூரியில் இடம் மாற்றம் கேட்ட போது கிடைக்கவில்லை .அதனால் அங்கிருந்து பல மைல்கல் தொலைவில் உள்ள மக்கூனா என்ற இடத்தில் உள்ள முஸ்லீம் பாடசாலையில் அவர் கற்பித்து வந்ததுடன் ஒவ்வொரு நாளும் கொளுத்தும் வெயிலில் சைக்கிள் மூலம் அங்கு பயணத்தை செய்து வந்தார் .

இதற்கிடையில் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தெற்கில் வாழ்ந்த முஸ்லீம்கள் தம் சொந்த இன தென் வாழ் சகோதரர்களால் நடத்தப்பட்ட விதம் பற்றி கூறியாக வேண்டும் (தொடரும் )

படிப்பகம்